Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



பெறுநர்
ஊராட்சி மன்ற தலைவர்
வயலாநல்லூர் ஊராட்சி.
பூவிருந்தவல்லி ஒன்றியம்.

பெறுநர்
திரு. K.வெங்கடேசன்,
ஆணையர்,
பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம்.

ந.க.எண். 2656/2024/அ3 நாள்: 08.08.2024.

அய்யா/அம்மையீர்,

பொருள்: மனைபிரிவு ஒப்புதல் (New Layout) - பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம், வயலாநல்லூர் "ஆ" ஊராட்சி, சொக்கநல்லூர் கிராமம், ச.எண்: 299/2A -ல் மனைபிரிவு அமைக்க - அனுமதி கட்டணம் செலுத்துதல் தொடர்பாக.

பார்வை :
1. CMDA Ltr No: Layout I/0032/2024 Dt: 28.06.2024.
2. M/s Samson Foundations rep. by Rajiv B. Sampat, No 191, demellows Road, Choolai, Chennai 600 112. அவர்கள் மனு: 05.08.2024.

--*-*-*-*-*

பார்வை-2ல் பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம், வயலாநல்லூர் "ஆ" ஊராட்சி, சொக்கநல்லூர் கிராமம், ச.எண்: 299/2A -ல் Regular Plots 1 to 73 and EWS Plots 74 to 88 மொத்தம் 88 மனைகள் அமைக்க PPD/I.O.No:137/2024-ன் படி சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தினால் திட்ட அனுமதி வழங்கப்பட்டது. கீழ்குறிப்பிட்டுள்ள [illegible] கட்டணங்கள் நிபந்தனைகளுக்குட்பட்டு வசூலிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தினால் திட்ட வரைபட அனுமதியில் குறிப்பிட்டுள்ள உரிய விதிகளுக்குட்பட்டு இறுதி அனுமதி வழங்க ஊராட்சி மன்ற தலைவர், வயலாநல்லூர் ஊராட்சி அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.

S.No	Amount Details	Account Details	Amount
1	Commissioner Panchayat Union	E- Challan 202408070307 87/01.08.2024	88,000
2	Armed Forces Fund, Flag Day, Tiruvallur	Online Fd/fund/394444/08.08.2024	44,000

நிபந்தனைகள்

1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் நிபந்தனைகளின்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்படவேண்டும். மனைப்பிரிவிற்குள் வரும் தெருக்கள் அனைத்தும் சரளைக்கற்களைக் கொண்டு, மனுதாரர் நிர்வாக அதிகாரியினால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் அமைக்கப்பட்டதனை உறுதி செய்துக்கொண்டு அதன் பின்னரே அனுமதி வழங்கப்பட வேண்டும்.
2. தகுந்த சிறுபாலங்கள் சாக்கடை வடிகால், தூய்புரவு, தெருவிளக்கு முதலிய வசதிகளும் மனுதாரர் அமைத்து தரவேண்டும். மனையின் அளவுகளில் அமைப்பில் மாற்றங்கள் செய்வதோ அல்லது வரையறுக்கப்பட்ட பொது உபயோகத்திற்கான இடங்களில் மாறுதல் செய்வதோ கூடாது.
3. தெரு மனையில் அமையும் மனைகளில் மூலைகளில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி திருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும்.

4. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் விடப்பட்டுள்ள வந்த ஒரு மனைகளையும் மொத்த காலியிடங்களை பிரித்து காட்டப்பட்டுள்ள மனைகள் தவிர குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமல்லாது கடை, பல்பு கடைகளை மற்றும் குடியிருப்பு அல்லாத குடியிருப்பைத் தவிர உபயோகத்திற்கல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தக் கூடாது.

5. வந்த ஒரு மனையிலும் தனித்தனியாக குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். தவிர எக்காலத்திலும், தனிமனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகளையோ, அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் வந்த மனைகளையும் திருத்தி அமைப்பதோ உட்பிரிவினைப்பதோ மாறுபட்ட உபயோகத்திற்கோ பயன்படுத்தக் கூடாது.

6. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு கட்டிட வரம்பு 10 அடிக்கு குறையாமல் இருக்க வேண்டும். மனையின் எல்லைக்குள் கட்டிட வரம்பிற்குட்பட்ட நிலப்பகுதியின் தெருவில் உயர் மட்டத்தில் இருந்து 5 அடி உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்த கட்டிடமோ சுவரோ கட்டப்படக்கூடாது.

7. மனையின் பின்புற எல்லைக்குள் கட்டத்திற்கும் இடையில் மனையில் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 5 அடி அளவு உள்ள திறந்த வெளி இருக்கவேண்டும். இது பின்பக்க திறந்த வெளியில் கிணறு, மல அறை, எருக்குழி, மாட்டுத் தொழுவம், உந்துவண்டியை நிறுத்த கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் அதைச் சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அனுமதிக்கலாம். ஆனால், அக்கட்டிடங்கள் மொத்தமான பின் எல்லையில் நிலத்தின் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமல் மனையின் பின்பக்க மட்டத்திலிருந்து 12 அடி உயரத்திற்கும் மேற்படாமல் இருக்க வேண்டும்.

8. மனையின் பரப்பின் 75 சதவீகிதத்திற்கும் மேல் கட்டிடம் கட்டக்கூடாது.

9. கடக்கால் போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமப்படுத்தவேண்டும். நிலச்சரிவை தடுக்கவோ மனையிலிருந்து மண்தோண்டி எடுத்து பள்ளங்கள் ஏற்படுத்தக் கூடாது.

10. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி வீடு கட்டும் திட்டங்களுக்கு உட்படுவதாக உறுதி மூலமாக சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அதிகாரியிடம் ஒப்பந்தம் செய்துக் கொள்ள வேண்டும். மனைகள் விற்பனையையும் மற்றும் வங்கி பிணையையும் கட்டுப்படுத்தும் வகையில் கட்டுத் திட்டங்கள் விற்பனைப் பத்திரங்கள் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.

1. அங்கீகரிக்கப்பட்ட மனைபிரிவு வரைபடம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

2. மனைப்பிரிவு ஒப்புதலுக்கான கட்டணம் பெற்றுக்கொண்டு ஒப்புதல் அளிக்க ஊராட்சி மன்ற தலைவர் வயலாநல்லூர் ஊராட்சி அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

3. சாலை வசதி குடிநீர் வசதி மற்றும் மின்சார வசதிக்குரிய அனைத்து கட்டமைப்புகளையும் இந்த மனைப்பிரிவு உரிமையாளர் செய்து தர வேண்டும். அதை வயலாநல்லூர் ஊராட்சி மன்ற தலைவர் ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டும்.

4. ஒப்புதல் அளிக்கப்படும் இந்த வரைபட அனுமதிக்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழும வரைபடத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள I முதல் III வரையிலான நிபந்தனைகள் அனைத்தும் தவறாமல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கிட ஊராட்சி மன்ற தலைவர், வயலாநல்லூர் ஊராட்சி அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. தவறாமல் சத்தில் உள்ளாட்சி அமைப்பின் மூலம் வழங்கப்படும் மனைப்பிரிவு இறுதி அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.

6. L T Line மனைகளின் குறுக்கே உள்ளதை எடுப்பதற்கும் அல்லது மாற்றி அமைப்பதற்கு TNEB- க்கு பணம் செலுத்தப்பட வேண்டும். அப்பணி முடிவுற்றதா என்பதை ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டும்.

மேல் கீழ் மனைகளுக்கும்/மனைகளுக்கும் அனைத்தும் கூடாது காலியாக இருக்கவேண்டும் அதை ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டும்.

18. பூங்காக்கள் TNEB-க்கு ஒதுக்கிய இடம் Public Purpose Area ஊராட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் ஊராட்சிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டும்.

19. ஊராட்சியில் முறையாக தீர்மானம் ஒப்புதல் பெற்று ஊராட்சிக்கு இறுதியாக செலுத்தப்பட வேண்டிய உரிய கட்டணங்கள் வருவித்து மனைப்பிரிவு ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

20. தணிக்கையில் சுட்டிகாட்டப்படும் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

21. பொதுபணித்துறை மூலம் வரைபடத்தில் தெரிவித்துள்ளவாறு நிபந்தனைகளை பின்பற்றப்பட வேண்டும்.

22. வரைபடத்தில் உள்ளபடி சாலையோரம் 0.6m மழைநீர்கால்வாய் அமைக்கப்பட வேண்டும் வயலாநல்லூர் ஊராட்சி மன்ற தலைவர் அதை ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டும்.

23. இந்த மனையில் (PWD Chanal) பொதுபணித்துறை கால்வாய்கள் இருப்பின் அதனை பராமரிக்கப்பட வேண்டும். வயலாநல்லூர் ஊராட்சி மன்ற தலைவர் ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டும்.

24. வரைபடத்தில் உள்ளபடி சாலைகள் அனைத்தும் தார்சாலைகள் அமைக்கபட வேண்டும்.

25. வரைபடத்தில் உள்ளபடி சாலையோரம் தெருவிளக்கு மின்கம்பங்கள் நடப்பட வேண்டும்.

26. அடிப்படை வசதிகளான சாலைகள், குடிநீர் விநியோகம், கழிவு நீர் வடிகால்வாய் மற்றும் தெருமின்விளக்குகளுக்கான மின் இணைப்பு இருக்க வேண்டும். அனைத்தும் சம்பந்தப்பட்ட உரிமையாளரால் பணிகள் செய்து முடித்து தரப்பட வேண்டும் அல்லது அதற்கான மதிப்பீடு தயாரித்து கட்டணங்கள் வங்கி வரைவோலைகள் மூலம் வயலாநல்லூர் ஊராட்சியில் செலுத்தியப்பின் ஊராட்சி தீர்மானம் ஒப்புதல் பெற்று ஊராட்சி இறுதி ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

27. அடிப்படை வசதிகளுக்கான பணிகள் முடிக்காமல் வரைபட அனுமதி ஊராட்சியால் அளிக்கப்பட்டால் அதற்கான முழு பொறுப்பு / வழக்குகள் / அனைத்தும் 1994 ஊராட்சிகள் சட்டம் ஊராட்சி செயல் அலுவலர் / தலைவர் என்ற முறையில் கிராம ஊராட்சி மன்றத்தலைவரே இதற்கு முழு பொறுப்பாவார்.

இணைப்பு : மனைப்பிரிவு வரைபடம்.

ஆணையர்
பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம்

1. M/s Samson Foundations rep. by
   Rajiv B. Sampat.
   No 191. demellows Road.
   Choolai.
   Chennai 600 112.

2. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), பூவிருந்தவல்லி.

3. உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்.
   எண் 1, காந்தி இர்வின் சாலை,
   எழும்பூர், சென்னை 08.

வயலாநல்லூர் ஊராட்சி மன்றம்

பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம்,
திருவள்ளூர் மாவட்டம்.

திரு. **D. துரைமுருகன்,** DEEE., BCA.
தலைவர், வயலாநல்லூர் ஊராட்சி

நெ. 606, மெயின் ரோடு,
சொக்கநல்லூர், வயலாநல்லூர் (அஞ்சல்)
பட்டாபிராம், சென்னை-72.
செல்: 8124553838, 7092532248.

தேதி :.....

ஊ.க.எண். 08/2024 நாள் : 13.08.2024

பொருள் : மனைப்பிரிவு ஒப்புதல் (New Layout) - வயலாநல்லூர் 'ஆ' கிராமம் - சர்வே எண்.299/2A-ல் ஊராட்சி மன்றத்தின் இறுதி ஒப்புதல் அளித்தல்.

பார்வை :
1. உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் அவர்களின் கடிதம் எண்.Layout-1/032/2024, நாள்.28.06.2024.
2. சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம், Planning Permit No.15854 மற்றும் P.P.D.L.O.No.137-2024 நாள்.28.06.2024.
3. ஆணையர், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் அவர்களின் செயல்முறைகள் எண்.2656/2024/A3, நாள்.08.08.2024

******

உத்தரவு :-

பார்வையில் 1 மற்றும் 2-ல் கண்டுள்ளபடி, சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் ஒப்புதலும், பார்வையில் 3-ல் கண்டுள்ள ஆணையர், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் அவர்களுடைய செயல்முறைகள் உத்தரவில் குறிப்பிட்டுள்ளபடி மனைப்பிரிவு கட்டணங்கள் பெறப்பட்டுள்ளதாலும், மனைப்பிரிவு சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் உத்திரவில் குறிப்பிட்டுள்ளபடியும், ஊராட்சியின் விதிமுறைகளின்படியும் அமைக்கப்பட்டுள்ளதாலும், மேற்கண்ட மனைப்பிரிவிற்கு ஊராட்சி மன்றத்தின் இறுதி ஒப்புதல் அளிக்கப்படுகின்றது.

பெறுநர்

M/s Samson Foundations rep.by
Rajiv B.Sampat,
No.191, Demellows Road, Choolai, Chennai - 600 112.

தலைவர்
வயலாநல்லூர் ஊராட்சி
பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம்



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate